சிறப்பு சார்பு நீதிமன்றம், (இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை.

முன்னிலை: திரு.A. சரவண செந்தில் குமார், பி.காம்., பி.எல்.,
சிறப்பு சார்பு நீதிபதி, மதுரை

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 16 ஆம் நாள்
வியாழக்கிழமை

எம்.சி.ஓ.பி.எண்874/2024
CNR No.TNMD0E0009152024

சின்னநாச்சி (எ) மீனா (எ) மீனாட்சி (வயது 36/2024)
க/பெ ஆண்டிசாமி,
எண்.200, வார்டு எண்.1,
கம்பூர் கிராமம்,
கோட்டம்பட்டி தாலுகா,
மேலூர், மதுரை மாவட்டம்.

... மனுதாரர்

/எதிராக/

1. சி.ராமநாதன்,
த/பெ சொக்கலிங்கம்,
எண்.2/87. காட்டுகுடிபட்டி,
மனலூர், திருப்பத்தூர் தாலுகா,
சிவகங்கை 630140

2. பிரிவு மேலாளர்,
ஐசிஐசிஐ லம்போர்டு ஜெனரல்
இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
முதல் மாடி,
ஏ ஏ டவர்ஸ், பிளாட் எண்.5, பைபாஸ் ரோடு,
மதுரை மாவட்டம்

இம்மனு என் முன்பாக 15.07.2026 விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.வேலுமுருகன்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.I.ரமேஷ் (எ) ஜுவானந்தம்., அவர்கள் ஆஜராகியும்.,

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:21 +0530

இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றம் வழங்கும்,

உத்தரவு

1. கடந்த 22.11.2022 ம் தேதியன்று மனுதாரருக்கு TN–63–BJ–2880 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தினால் ஏற்பட்ட விபத்திற்காக ரூ,7,00,000/– இழப்பீடு கோரி, மோட்டார் வாகன சட்ட பிரிவு 166 விதி 3(1) கீழ் மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் :

2.1) மனுதாரர் காயம்பட்ட நபர். விபத்தின்போது மனுதாரருக்கு வயது 36. விபத்து சமயத்தில் கூலி வேலை செய்து மாதம் ரூ.15,000 /– சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளார்.

2.2) மனுதாரர் கடந்த 22.11.2022ம் தேதியன்று மதியம் 12.30 மணியளவில் திருச்சி மதுரை மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக, கச்சிராயன்பட்டி பிரிவு ரோட்டிற்கு வடக்கே உள்ள ஹரிகிருஷ்ணன் ஹோட்டல் எதிரே மேற்படி 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN–63–BJ–2880 என்ற ஹோண்டா ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் மனுதாரர் பின்னால் உட்கார்ந்து வந்துகொண்டிருந்தபோது மனுதாரின் உறவினர் வண்டியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரருக்கு முன்னால் மாட்டை பிடித்துகொண்டு சென்றவர் மீது இருசக்கர வாகனம் மோதியதில், மனுதாரருக்கு முகத்திலும் மற்றும் இரு கைகள் மற்றும் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

2.3) மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக, மேலூர் அரசு மருத்துவமனையில் முலுதவி சிகிச்சை பெற்று, பின்பு, மதுரை அரசு இராஜாஜி

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:27 +0530

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயங்களினால், மனுதாரரால் எந்த வேலையும் செய்ய இயலாமல் வருமான இழப்பும் ஏற்பட்டுவிட்டது. மேற்படி விபத்து குறித்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது கொட்டாம்பட்டி காவல்நிலைய குற்ற எண்.375/2022–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

2.4) மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவும், அதிவேகமாகவும் காரணமாகும். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார். எனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தோ ரூ7,00,000/– இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார் என கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) <u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

3.1) மனு சட்டப்படியும், சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மற்றவைகள் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது. அசல் மனுவில் கூறப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3.2) 1ம் எதிர்மனுதாரின் TN–63–BJ–2880 என்ற பதிவெண் கொண்ட வாகனத்திற்கு இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Bundle Policyன் அடிப்படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 3ம் தரப்பினருக்கான காப்பீடு 17.09.2020 முதல் 16.09.2025 வரை உள்ளது என்றும், Own damageக்கான காப்பீடு 17.09.2020 முதல் 16.09.2021 வரை உள்ளது என்றும், கூறியுள்ளார். விபத்து நடந்த 22.11.2022ம் தேதி Liability Only காப்பீட்டின் கீழ் உள்ளது என்றும், இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்வதற்கு தனியாக

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:32 +0530

கூடுதல் ப்ரீமியம் எதுவும் செலுத்தப்படவில்லை என்பதால், இந்த எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

3.3) மேலும், மனுதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்படாமல் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார் என்பதால் இம்மனு விசாரணைக்கு ஏற்கதக்கதாக இல்லை என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென கூறியுள்ளார். இருசக்கர வாகனத்தினை ஓட்டியவர் சாலையின் சரியான பக்கத்தில், குறைவான வேகத்தில் ஓட்டி சென்றபோது அடையாளம் தெரியாத ஒருவர் திடீரென சாலையை கடக்க முயன்றபோது விபத்தை தவிர்க்க முயற்சித்தார் என்றும், மனுதாரர் தலைகவசம் அணியாமலும், வாகனத்தினை பிடித்து கொள்ளாமலும் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தபோது இருசக்கர வாகனத்திலிருந்து தானாகவே கீழே விழுந்து காயமடைந்துள்ளார். மேற்படி விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம் இல்லை என்பதால் இந்த எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

3.4) மனுதாரர் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யவேண்டும். மேலும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள். மனுதாரருக்கு பகுதி ஊனமோ நிரந்தர ஊனமோ ஏற்படவில்லை. மனுதாரரின் வயது, தொழில், மாத வருமானம் ஈட்டும் அளவு ஆகியவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மனுதாரர் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகப்படியான இழப்பீடு கேட்டுள்ளார். மேற்படி சங்கதிகளை மனுதாரரே தகுந்த சான்றாவணங்களுடன் நிரூபிக்கக் கடமைப்பட்டவராவார். எனவே, 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யவேண்டும் என கூறியுள்ளார்.

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:36 +0530

4) தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :

1) விபத்து யாருடைய கவனக் குறைவால் ஏற்பட்டுள்ளது?

2) மனுதாரருக்கு எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைப்பட்டதா? மற்றும் மனுதாரருக்குக் கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு?

3) மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் என்ன?

5) மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களும், மனுதாரின் இயலாமை சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டும், மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

6) கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் மருத்துவ ஆவணங்களின் படி விபத்து மற்றும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக தெளிவாக முன்னிலைப்படுத்தப்பட்டதாகவும், எனவே, மனுவில் கோரியபடி உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்க உத்தரவிடுமாறு வாதிட்டார்.

7) கற்றறிந்த 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது, விபத்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை எனவும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு Bundled policy மூலம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தில் பயணம் செய்த நபர் மூன்றாம் நபராக கருத முடியாது என்பதால், மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், எனவே, 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்து, உத்தரவிடுமாறு வாதிட்டார்.

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:41 +0530

8) பிரச்சனை 1, 2 க்கான தீர்வு

8.1) 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது விபத்து நடந்து 6 மாத காலவரையறைக்குள் மனு தாக்கல் செய்யவேண்டும் என்றும், ஆனால் மனுதாரர் 6 மாத காலவரையறைக்குள் தாக்கல் செய்யாததால் நிலைக்கத்தக்கல்ல என்றும் வாதிட்டார். இது குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **Malaravan Vs.1.Praveen Travels Private Limited and 2 others, Dated 18.08.2023** என்ற வழக்கில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> ***"28.In view of the above discussion, it is clear that in cases where any request is filed and accessible by the Tribunal, then there will be no question of six months limitation arising. The issue of six months limitation will arise only in case where no FIR has been registered by the Police and no report has been sent/uploaded."***

மேற்படி முன்தீர்ப்பில் கூறப்பட்டுள்ள சட்டக்கருத்துரையின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் மோட்டார் வாகன திருத்த சட்டத்தின் படியான மனு தாக்கல் செய்வதற்கான 6 மாத காலவரையறை பொருந்துக்கூடியதாக இல்லை என தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த வழக்கில் விபத்து நடந்தவுடன் 23.11.2022ம் தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னிட்டு 18.04.2024 ம் தேதியில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு 6 மாத காலவரையறை கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், நிலைக்கத்தக்கது இல்லை என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

8.2) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலினை செய்ததில் அசல் மனுவில் மனுதாரர் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி விபத்து குறித்து மதுரை மாவட்டம் கொட்டம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.375/2022 ல்279, 337 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது.

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:46 +0530

8.3) மோட்டார் வாகன இழப்பீடு வழக்குகளில் விசாரணை தொடர்பாக, *United India Insurance Company Vs. Krishnaveni and Others(CDJ 2015 MHC 798)* குறிப்பிடப்பட்டுள்ளது.

"...... *16. It is well settled law that proceedings before the Claims Tribunal are summary in nature and it is sufficed to consider, whether there is any preponderance of probability, as to the manner of accident, as detailed in the claim petition. Strict proof of evidence is not required. In the absence of any rebuttal evidence, the finding of the Tribunal regarding negligence cannot be termed as perverse or it is not a case of no evidence....."*

மேற்கண்ட முன்தீர்ப்பை பின்பற்றி இந்த மனுவை பரிசீலினை செய்கையில், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையை பரிசீலினை செய்ததில்,TN 63 BJ 2880 என்ற பதிவெண் கொண்ட ஹோண்டா ஆக்டிவ் வாகனத்தினை ஓட்டி வந்த ஓட்டுநர் இராமநாதன் த/பெ சொக்கலிங்கம் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் தெரியவருகிறது. மனுதாரர் மனுவில் கூறியுள்ளப்படி திருச்சி – மதுரை நான்கு வழிச்சாலையில் கச்சிராயன்பட்டி பிரிவு அருகே ஹரிகிருஷ்ணா ஹோட்டல் அருகில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி சென்றுகொண்டிருந்தபோது தீடீரென ஒரு நபர் குறுக்கே வந்ததால் மோதிவிபத்து ஏற்பட்டதாக தெரியவருகிறது. இந்நிலையில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் வாகனத்தினை சாலையில் ஓட்டும்போது கவனத்துடன் வேகத்தை கட்டுப்படுத்தி, ஆரன் அடித்து, மிதமான வேகத்தில் ஓட்டியிருக்கும்பட்சத்தில் மேற்படி விபத்து தவிர்க்கப்பட மிகுதியான வாய்ப்பு உள்ளது. மேற்படி சங்கதிகளை மறுத்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் நீதிமன்றத்தில் அஜராகி சாட்சியம் அளிக்கவில்லை எனவே, மேற்படி விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்று மேற்படி பிரச்சனை–1க்கு இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:55:53 +0530

<u>9) பிரச்சினை –2க்கான தீர்வு</u>

9.1) பிரச்சனை 1 ன் படி மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து நடந்துள்ளதாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை ஓட்ட மனுதாரர் பின்னால் அமர்ந்து பயணம் செய்தபோது, ஒருவர் குறுக்கே வந்ததால் இருவரும் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் காயங்கள் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீட்டு செய்யப்பட்டுள்ள காப்பீடு நிறுவனம் ஆகும். இத்தகைய சூழ்நிலையில், மனுதாரர் பயணம் செய்த அதே வாகனத்தில் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டுள்ளதா என்பது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

9.2) இது குறித்து மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும், 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திற்கும் இடையேயான இந்த மனுதாரர் 3ம் நபர் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்ட விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் பொறுப்புறுதி ஏற்கவேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

9.3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட காப்பீடு 17.09.2020ம் தேதியில் வழங்கப்பட்டு, சொந்த சேதத்திற்காக (Own Damage) காப்பீடு 17.09.2020 முதல் 16.09.2021 வரையும் liability policy 17.09.2020 முதல் 16.09.2025 வரையிலும் வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி காப்பீடு 17.09.2020 முதல் 16.09.2021 வரை Bundled policy ஆகவும் அதன்பின்னர் 17.09.2020 முதல் 16.09.2025 வரை liability policy only (Act only

SARAVANA SENTHIL KUMAR Digitally signed by SARAVANA SENTHIL KUMAR Date: 2026.07.16 17:56:00 +0530

Policy) ஆகவும் உள்ளது என்றும், விபத்து தேதியான **22.11.2022**ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கான காப்பீடு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் **standalone liability only policy** ஆக மட்டுமே செயல்பாட்டில் உள்ளது என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்யும் நபருக்கு ஏற்படும் விபத்து பாதிப்பிற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு வழங்க கடமைபடவில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

9.4) ஆனால், மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Standalone Liability only policy மட்டுமே செயல்பாட்டில் உள்ளதாக கருதப்பட்டாலும் கூட மனுதாருக்கு ஏற்பட்ட காயத்திற்கான இழப்பீட்டை liability only policy–யின் அடிப்படையில் முதலில் 2ம் எதிர்மனுதாரர் செலுத்திவிட்டு பின்னர் வாகன உரிமையாளரிடமிருந்து திரும்ப பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வாதிட்டு அதற்கு ஆதரவாக மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கடந்த 17.07.2025ம் பிறப்பித்த **Sunita & ors Vs United India Insurance Co.ltd 2026(1) 2026(1) TNMAC 1 SC** என்ற வழக்கில் பிறப்பித்த பின்வரும் சட்டக்கருத்துரையை மேற்கோள் காட்டி வாதிட்டார் மேற்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின் பின்வரும் சாராம்சம் கவனத்தில் கொள்ளப்பட்டது.

12. *The next question which arises for our consideration is whether the Insurance Company is liable to indemnify the compensation amount to the claimant-appellant and, thereafter, recover the same from the driver and owner of the vehicle.*

13. *Adverting to the facts in hand, from a bare perusal of the record, it is borne that the vehicle in question was insured with "Liability Only Policy"and no premium was paid to cover the driver, owner, or a gratuitous passenger travelling therein. However, even then, in our view, the Courts below erred in holding that the Insurance Company is not liable to pay the compensation to the claimant-appellants, for the principle of "Pay and Recover"ought to have been invoked. As such, we are inclined to interfere with the above findings of the Courts below.*

14. *We must advert to the exposition of this Court in National Insurance Co. Ltd. v. Baljit Kaur7. The deceased therein was travelling as a gratuitous passenger, and due to the rash and negligent driving of the offending vehicle, lost his life. The Insurance*

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:05 +0530

Company was directed to satisfy the amount awarded by the Courts below and recover the same from the owner of the vehicle, as the premium was not paid by the owner of the vehicle towards gratuitous passenger.

15. *The above position has been followed by this Court in Anu Bhanvara v. IFFCO Tokio General Insurance Co. Ltd., 8 wherein the injured person was travelling as a gratuitous passenger and was not covered under the Insurance Policy, the driver and owner of the vehicle was held liable for payment of compensation amount. This Court applied the principle of "Pay and Recover"and directed the Insurance Company to pay the amount and, thereafter, recover the same from the owner of the vehicle.*

16. *The aforementioned principle was adopted by this Court in various judgments of this Court in Amrit Lal Sood v. Kaushalya Devi Thapar9; New India Assurance Co. Ltd. v. C.M. Jaya10; National Insurance Co. Ltd. v. Challa Upendra Rao11; New India Assurance Co. Ltd. v. Vimal Devi12; National Insurance Co. Ltd. v. Saju P. Paul13; Manuara Khatun v. Rajesh Kumar Singh14; and Puttappa v. Rama Naik15.*

17. *Applying the above expositions of law, the Courts below ought to have directed the Insurance Company to indemnify the amount and thereafter recover the same.*

18. *Therefore, in light of the attending facts and circumstances of the case, we are of the view that the Insurance Company is liable to indemnify the compensation amount awarded by the Tribunal and recover the same only from the owner of the offending vehicle.*

மேற்சொன்ன முன்தீர்ப்பின்படி liability policy only ன் அடிப்படையில் காப்பீடு செய்யப்பட்டுள்ள நிறுவனம் காயம்பட்ட நபருக்கு இழப்பீட்டை செலுத்திவிட்டு, பின்பு வாகன உரிமையாளரிடமிருந்து வசூலித்துக்கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

9.5) **எனவே, இந்த வழக்கில் 2ம் எதிர்மனுதார் நிறுவனம் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு வழங்கிய காப்பீடு 17.09.2020ம் தேதி Bundled Policy ஆக வழங்கப்பட்டு விபத்து தேதியான 22.11.2022ம் தேதியில் liability only policy ஆக செயல்பாட்டில் உள்ளது என்று எ.ம.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தெரியவரும் நிலையில், மேற்கண்ட மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழக்கின் தீர்ப்பை பின்பற்றி மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்து பாதிப்பிற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம்**

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:09 +0530

இழப்பீட்டை செலுத்த பொறுப்புறுதி கொண்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது. எனவே **மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீட்டை செலுத்திவிட்டு, பின்பு வாகனத்தின் உரிமையாளரான 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும் என்றும்,** இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

10). அடுத்தபடியாக மனுதாரருக்குக் கிடைக்கத்தக்க இழப்பீடு தொகை நிர்ணயம் செய்வது தொடர்பாகவும், கீழ்க்கண்ட முன்தீர்ப்புகளை பின்பற்றுவது அவசியமாகிறது.

10.1) ***R.D.Hattangadi... Vs. Pest Control (India) Pvt.Ltd.,(AIR 1995 SC page 755)*** வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

> *“Broadly speaking, while fixing the amount of compensation payable to a victim of an accident the damages have to be assessed separately as pecuniary damages and special damages. Pecuniary damages are those which the victim has actually incurred and which are capable of being calculated in terms of money; whereas non-pecuniary damages are those which are not capable of being assessed by arithmetical calculations. In order to appreciate two concepts pecuniary damages may include expenses incurred by the claimant: (i) medical attendance; (ii) loss of earning of profit up to the date of trial; (iii) other material loss. So far as non-pecuniary damages are concerned, they may include (i) damages for mental and physical shock, pain and suffering already suffered or likely to be suffered in future (ii) damages to compensate for the loss amenities of life which may include a variety of matters, (i.e.,) on account of injury the claimant may not be able to walk, run or sit; (iii) damages for the loss of*

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:14 +0530

expectation of life, (i.e.,) on account of injury the normal longevity of the person concerned is shortened; (iv) inconvenience, hardship, discomfort, disappointment, frustration and mental stress in life"

10.2) ***Ashwani Kumar Mishra... Vs. P.Muniam Babu (1999 ACJ 1105 SC)*** **வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

A person not only suffers injuries on account of accident but also suffers in mind and body on account of the accident throughout his life and a feeling is developed that he is no more a normal man and cannot enjoy the amenities of life as another normal person can. While fixing compensation for pain and suffering as also for loss of amenities of life, the features like his age, marital status and unusual deprivation he has undertaken in his life has to be reckoned.

10.3) *Rajkumar Vs Ajaykumar and another 2010 (2) TNMAC 581*, **வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

"…….5. The heads under which compensation is awarded in personal injury cases are the following:

Pecuniary damages (Special damages)

(i) Expenses relating to treatment, hospitalization, medicines, transportation, nourishing food, and miscellaneous expenditure.

(ii) Loss of earnings (and other gains) which the injured would have made had he not been injured, comprising

(a) Loss of earning during the period of treatment;

(b) Loss of future earnings on account of permanent disability.

(iii) Future medical expenses.

Non-pecuniary damages (General damages)

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:19 +0530

(iv) Damages for pain, suffering and trauma as a consequence of the injuries.

(v) Loss of amenities (and/or loss of prospects of marriage).

(vi) Loss of expectation of life (shortening of normal longevity).

In routine personal injury cases, compensation will be awarded only under heads (i), (ii)(a) and (iv). It is only in serious cases of injury, where there is specific medical evidence corroborating the evidence of the claimant, that compensation will be granted under any of the heads (ii)(b), (iii), (v) and (vi) relating to loss of future earnings on account of permanent disability, future medical expenses, loss of amenities (and/or loss of prospects of marriage) and loss of expectation of life. Assessment of pecuniary damages under item (i) and under item (ii)(a) do not pose much difficulty as they involve reimbursement of actuals and are easily ascertainable from the evidence. Award under the head of future medical expenses—item (iii)—depends upon specific medical evidence regarding need for further treatment and cost thereof. Assessment of non-pecuniary damages—items (iv), (v) and (vi) — involves determination of lump sum amounts with reference to circumstances such as age, nature of injury/deprivation/disability suffered by the claimant and the effect thereof on the future life of the claimant. Decision of this Court and High Courts contain necessary guidelines for award under these heads, if necessary. What usually poses some difficulty is the assessment of the loss of future earnings on account of permanent disability (ii) (a). We are concerned with that assessment in this case.

Assessment of future loss of earnings due to permanent disability…..”

“……13. We may now summarise the principles discussed

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:25 +0530

above :

(i) All injuries (or permanent disabilities arising from injuries), do not result in loss of earning capacity.

(ii) The percentage of permanent disability with reference to the whole body of a person, cannot be assumed to be the percentage of loss of earning capacity. To put it differently, the percentage of loss of earning capacity is not the same as the percentage of permanent disability (except in a few cases, where the Tribunal on the basis of evidence, concludes that percentage of loss of earning capacity is the same as percentage of permanent disability).

(iii) The doctor who treated an injured-claimant or who examined him subsequently to assess the extent of his permanent disability can give evidence only in regard the extent of permanent disability. The loss of earning capacity is something that will have to be assessed by the Tribunal with reference to the evidence in entirety.

(iv) The same permanent disability may result in different percentages of loss of earning capacity in different persons, depending upon the nature of profession, occupation or job, age, education and other factors……"

மேற்கண்ட முன்தீர்ப்புகளை கருத்தில் கொண்டு, இம்மனுவை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முகத்திலும் மற்றும் இருகைகள் மற்றும் கால்களில் பலத்த இரத்த காயமும் ஏற்பட்டுள்ளது என்று முதல் விசாரணை சாட்சியத்தின் மூலம் தெரியவருகிறது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் ம.சா.ஆ.9 மருத்துவ ஆவணங்கள் ஆகிய ஆவணங்களின் படி மனுதாரர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 22.11.2022 முதல் 25.11.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், விபத்தினால் மனுதாரருக்கு பலதரப்பட்ட கொடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளது. இடது கை மணிக்கட்டில் சிராய்ப்பு காயமும், புருவத்தில் காயமும், வலது கன்னத்தில் காயமும் ஏற்பட்டுள்ளது என்பதும் Conservative Management

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:31 +0530

அடிப்படையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும் ம.சா.1 சாட்சியத்திலிருந்தும், மேற்படி ஆவணங்களிலிருந்தும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்பது நிரூபணமாகிறது.

10.4) மனுவில் குறிப்பிட்டுள்ள இழப்பீட்டு தலைப்புகளை ஒவ்வொன்றாக பரிசீலனை செய்கையில், மனுதாரர் விபத்து சமயத்தில் பொருளீட்டும் திறனை இழந்தமைக்காக ரூ.3,00,000/-ம் இழப்பீடு கோரியுள்ளார். மனுதாரர் விபத்து சமயத்தில் விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்ததாக கூறியுள்ளார். ஆனால் அதற்கு ஆதரவாக வருமான இழப்பு ஏற்பட்டதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் தெரியவருகிறது. இருப்பினும், மனுதாரர் குடும்ப பெண்மணியாக குடும்பத்தை பராமரிப்பவர் என்பதால் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Shishu Pal @ Shish Ram & Ors VS Surjeet & Ors (Special Leave petition (Civil) No.33915 of 2025 என்ற வழக்கில் 11.06.2026ம் தேதி பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் குடும்ப பெண்மணி என்ற அடிப்படையில் மனுதாரருக்கு குடும்ப பராமரிப்பு என்ற செலவு என்ற தலைப்பின் கீழ் மாதந்தோறும் ரூ.30,000/- வழங்கப்படவேண்டியதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி விபத்தில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், Conservative Management அடிப்படையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. எனவே மேற்படி விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் மனுதாரருக்கு 2 மாத காலம் குடும்பத்தை பராமரிக்க இயலாது என்பதால், இரண்டு மாத கால குடும்ப பராமரிப்பு செலவாக ரூ30,000/- வீதம் (ரூ.30,000 x 2) = **ரூ.60,000/-** வழங்கப்படுகிறது.

10.5) அடுத்தபடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்லுதல் தொடர்பான தலைப்பை பொருத்தவரையில், மேற்கண்ட மருத்துவ ஆவணங்களை

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:39 +0530

பரிசீலனை செய்கையில், மனுதாரர் சிகிச்சைக்கு சென்று வந்தவகையில் போக்குவரத்து செலவு ஏற்பட்டது தொடர்பாக குறிப்பிட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, எனினும் போக்குவரத்து செலவு என்ற தலைப்பின் கீழ் **ரூ.5,000/-** இழப்பீடு பெற மனுதாரர் உரிமையுடையவராகிறார் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.6) மனுதாரர் விபத்து காலத்தின்போது சிகிச்சை என்ற வகையில் ஊட்ட சத்து தலைப்பின் கீழ் ரூ.10,000/-ம் இழப்பீடு கோரியுள்ளார். மேற்படி விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயத்தினால் அவர் உடலை மேம்படுத்தவதற்காக மேற்படி காலகட்டத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஊட்டச்சத்து உணவிற்காக **ரூ.10,000/-ம்,** ஆடை மற்றும் பொருட்கள் சேதத்திற்காக **ரூ.2,000/-ம்** வழங்கப்பட்டுள்ளது.

10.7) மனுதாரர் விபத்து காலத்தின் போது மருத்துவ செலவு செய்ததாக ரூ.25,000/-ம் இழப்பீடு கோரியுள்ளார். அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.2 மருத்துவ விபத்து பதிவேட்டை மட்டும் தாக்கல் செய்துள்ளார். சிகிச்சை பெற்றதற்கான மருந்து வாங்கிய மருத்துவ இரசீகளை தாக்கல் செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது. எனவே, மனுதாரருக்கு மருத்துவ செலவு என்ற தலைப்பின் கீழ் கிடைக்கத்தக்கதல்ல.

10.8) மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 22.11.2022 முதல் 25.11.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும், Conservative Management அடிப்படையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்பதும் தெரியவருகிறது. எனவே மேற்படி

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:45 +0530

சிகிச்சையின் போது மனுதாரருக்கு ஏற்பட்ட வலி மற்றும் துன்பத்திற்காக **ரூ.20,000/-**மும், அசௌகரியமாக இருக்கும் என்பதால், அசௌகரியத்திற்காக **ரூ.10,000/-**ம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

10.9) மனுதாரர் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 22.11.2022 முதல் 25.11.2022 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார் என்பதும் தெரியவருகிறது. மேற்படி 3 நாட்களில் மனுதாரரை கவனித்துக்கொண்ட உடனிருந்த நபருக்காக 3 நாட்கள் கணக்கில் எடுத்துக்கொண்டு நாள் 1க்கு ரூ.400 வீதம் 3 நாட்களுக்கு (3 x 400) = **ரூ.1200**/- இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

10.10) மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட காயத்தின் ஊனத்தின் தன்மையை அறிய மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவக் குழுவின் முன்பாக மனுதாரர் ஆஜராகி உள்ளார். நீ.ம.சா.ஆ.1ன் படி மருத்துவ குழு மனுதாரருக்கு கொடுங்காயத்திற்காக 15% ஊனம் இருப்பதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 சான்றாவணங்களில் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் நிரந்தர ஊனம் என்பதாக குறிப்பாக கூறப்படவில்லை. இயலாமை சான்றில் நிரந்தர ஊனம் என்று குறிப்பாக கூறப்படாதநிலையில், மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் தற்காலிக ஊனமாகவே கருதப்பட வேண்டியதாக உள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு வருமானம் ஈட்ட முடியாத நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்பதால், மனுதாரருக்கு பெருக்கல் அட்டவணையின் கீழ் இழப்பீடு வழங்க அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10.11) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் *M.Chinnathambi Vs. S. Deepa and another 2020(1) TN MAC 617* என்ற வழக்கில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:51 +0530

முன்தீர்ப்பு வழங்கியுள்ளது.

> *"This court by the Judgment reported in the matter of National Insurance Co., Ltd., Vs.G.Ramesh 2013(2) TN MAC 583, granted Rs.3,000/- per percentage for accident occurred in the year 2009, enhancing from Rs.2,000/- per percentage taking into account the cost of living at that time. Due to passage of time, a sum of Rs.3,000/- per percentage of disability awarded in the year 2013 for the accident of the year 2009 is to be enhanced. Taking into consideration the raise in cost of living, it will be reasonable to award a sum of Rs.4,000/- per percentage for the accident of the year 2014 and 2015 and Rs.5,000/- per percentage for the accident from the year 2016 on wards disability certified by the qualified Doctor of Medical Board."*

அதேபோன்று, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் *Gomathi Vs. Manikandasamy and another - CMA No.19 of 2024* என்ற வழக்கில் Para 9ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டு முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

> *"The Tribunal had awarded a sum of Rs.5,000/- for every percentage of disability for an accident which occurred in the year 2019, which is on the lower side. Hence, this Court now awards a sum of Rs.7,000/- for every percentage of disability and accordingly...."*

இந்த வழக்கு விபத்து கடந்த 2022ம் ஆண்டில் நடைபெற்றுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் 2019ம் ஆண்டிற்கு ரூ.7,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இவ்வழக்கு விபத்து நடந்த 2022ம் ஆண்டிற்கு ரூ.8,000/- என்ற வீதத்தில் இழப்பீடு வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதன்படி மனுதாரருக்கு 15 சதவீதம் ஊனத்தின்படி, 1 சதவீதத்திற்கு ரூ.8,000/- என தீர்மானித்து 15% ஊனத்திற்கு (8000 x 15) **ரூ.1,20,000/-** இழப்பீடு வழங்கப்படுகிறது.

எனவே மனுதாரருக்கு கீழ்க்கண்ட வகையில் இழப்பீடு வழங்கப்படுகிறது.

1.	வருமான இழப்பிற்காக	ரூ.	60,000/-

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:56:56 +0530

2.	போக்குவரத்து செலவிற்காக	ரூ.	5,000/-
3.	ஊட்டசத்து உணவிற்காக	ரூ.	10,000/-
4.	ஆடை மற்றும் பொருள் சேதத்திற்காக	ரூ.	2,000/-
5.	வலி மற்றும் துன்பத்திற்காக	ரூ.	20,000/-
6.	அசௌகரியத்திற்காக	ரூ.	10,000/-
7.	உடனிருந்த நபருக்காக	ரூ.	1,200/-
8.	பகுதிநேர ஊனத்திற்காக	ரூ.	1,20,000/-
	மொத்தம்	**ரூ.**	**2,28,200/-**

மனுதாரர் மேலே குறிப்பிட்டுள்ள தலைப்புகள் தவிர வேறு தலைப்புகளின் கீழ் இழப்பீடு பெறத்தக்கவர்கள் அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

10. **பிரச்சனை –3**

இதர பரிகாரங்களைச் பொறுத்த வரை மனுதாரருக்கு இழப்பீடு வழங்க அவசியம் இல்லை என்றே உத்தரவிடப்படுகிறது.

11. 1. **முடிவில்,** மனுதாரரின் மனு செலவுத்தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மொத்த இழப்பீடாக **ரூ.2,28,200/-** ஐ மனுதாரர் மனு தாக்கல் 18.04.2024ம் தேதியில் இருந்து ஆண்டிற்கு 7.5% பின் வட்டியும் (தவறுகைக்காக மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலத்திற்குரிய வட்டி நீங்கலாக) மற்றும் செலவு தொகையுடன் கொடுக்க வேண்டும் என்றும்,

2. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Parminder Singh Vs Honey Goyal and others (Civil Appeal No.4299/2025) Dated 18.03.2025,** வழக்கின் உத்தரவை பின்பற்றி, மேற்படி தொகையை 2ம் எதிர்மனுதாரர் ஒரு மாதத்திற்குள் மனுதாரர் வங்கி கணக்கில் (Indian Bank, Karungalakudi Branch, A/c No.7156116676 IFSC Code : IDIB000K079) நேரடியாக வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி இழப்பீட்டு

SARAVANA SENTHIL KUMAR Digitally signed by SARAVANA SENTHIL KUMAR Date: 2026.07.16 17:57:04 +0530

தொகையை வைப்பீடு செய்யப்பட்ட விபரத்தை 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்திற்கு sscmcop1234@gmail.com or mdu.ascmcop-tn.indiancourts.nic.in என்ற E.mail-ID மூலம் தெரிவிக்கவேண்டும்.

3. மனுதாரர் நீதிமன்ற கட்டணமாக **ரூ.1,655/-** செலுத்தவேண்டும். மனுதாரர் ஏற்கனவே ரூ.100/- செலுத்தியதுபோக, மீதமுள்ள கூடுதல் நீதிமன்ற கட்டணம் **ரூ.1,755/-**ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்ட விபரம் குறித்து மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கவேண்டும். மனுதாரர் அவ்வாறு 15 தினங்களுக்குள் மீதமுள்ள நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறும்பட்சத்தில், அதற்கு பின்னிட்டு மனுதாரர் நீதிமன்ற கட்டணம் செலுத்தும் நாள் வரையிலான காலத்திற்கு இழப்பீடு தொகைக்கு எந்தவொரு வட்டியும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை எனவும், உத்தரவிடப்படுகிறது.

4. பின்னர் மனுதாரர் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்ட விபரம் குறித்து நீதிமன்றத்தில் ஒப்புகை கடிதம் பெற்று 2ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுத்த பின்னர் மனுதாரர் வங்கி கணக்கில் இழப்பீடு தொகையை நேரிடையாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

5. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் செலுத்தும் மேற்படி இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தனி நடவடிக்கை மூலம் வசூலித்துக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

6. வழக்கறிஞர் கட்டணமாக **ரூ.7,564/-** நிர்ணயம் செய்யப்படுகிறது.

<u>மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல்</u>

நீதிமன்ற கட்டணம்	ரூ.	1,655/-
வக்காலத்து நாமா ஸ்டாம்பு	ரூ.	10/-

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:57:09 +0530

வழக்கறிஞர் கட்டணம்	ரூ.	7,564/-
தட்டச்சு கட்டணம்	ரூ.	100/-
மொத்தம்	**ரூ.**	**9,329/-**

7. 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு **ரூ.9,329/-** செலவுத்தொகையை செலுத்த வேண்டும் என்றும், 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து தனி நடவடிக்கை மூலம் வசூலித்துக் கொள்ளலாம் என்று உத்தரவிடப்படுகிறது.

8. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன் தீர்ப்பு வழக்கு எண். Tr.Cmp. Nos. 264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd., V/s. Mr. Ayyanar and othersல் 11.5.2020 அன்று பிறப்பித்த உத்தரவுபடி நிறைவேற்றாணையின் விவரங்கள் அனைத்தும் இந்த உத்தரவில் சேர்க்கப்பட்டுவிட்டது. எனவே தனியாக நிறைவேற்றாணை பிறப்பிக்கப்படாது.

என்னால் உத்தரவு சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SARAVANA SENTHIL KUMAR
Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:57:15 +0530

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்,
மதுரை.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்

ம.சா.1 சின்னநாச்சி (எ) மீனா (எ) மீனாட்சி

ம.சா.2 – பிச்சைமணி

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்

ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை	நகல்
ம.சா.ஆ.2	டிஸ்சார்ஜ் சம்மரி	அசல்
ம.சா.ஆ.3	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநரின்	நகல்

	ஓட்டுநர் உரிமம்	
ம.சா.ஆ.4	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சானறதிழ்	நகல்
ம.சா.ஆ.5	ஆதார் அட்டை	நகல்
ம.சா.ஆ.6	வங்கி கணக்கு புத்தகம்	நகல்
ம.சா.ஆ.7	கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழ்	அசல்
ம.சா.ஆ.8	மனுதாரின் காயத்தினை காண்பிக்கும் புகைப்படம் – 2 எண்ணிக்கைகள்	அசல்
ம.சா.ஆ.9	மருத்துவ ஆவணங்கள்	நகல்

<u>நீதிமன்ற சான்றாவணம்</u>

நீ.ம.சா.ஆ.1 – ஊனச் சான்றிதழ்

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>

எ.ம.சா.1 – விஜயராகவன்

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

எ.ம.சா.ஆ.1 – இன்சூரன்ஸ் பாலிசி – நகல்

SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by SARAVANA SENTHIL KUMAR
Date: 2026.07.16 17:57:29 +0530

சிறப்பு சார்பு நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிமன்றம்,
மதுரை.

சிறப்பு சார்பு நீதிமன்றம்,
(இயக்கவூர்தி விபத்துக் கோருரிமை வழக்குகள் தீர்ப்பாயம்),
மதுரை.
எம்.சி.ஒ.பி எண்.874/2024
வரைவு / செவ்வை உத்தரவு
நாள் 16.07.2026